# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 198 | புதன்கிழமை Wednesday | 14.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# விஜயவாடா கனகதுர்கா கோயிலில் முதலமைச்சர் விஜய் சாமிதரிசனம்



ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டிற்கு இடையேயான தண்ணீர் தொடர்பான பிரச்சினைகள் மீண்டும் பேசுப்பொருளாகியுள்ளது. இந்த விவகாரம் குறித்து முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் இன்று விஜயவாடாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். முதல்வர் விஜய் ஆந்திர வருகை கங்கா திட்டத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய கிருஷ்ணா நதி நீரின் பங்கு மற்றும் தண்ணீர் விநியோகத்தில் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள் குறித்து இரு முதலமைச்சர்களும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில்,கோதாவரி-கிருஷ்ணா-காவேரி நதிகளை இணைக்கும் பிரச்சனையும் குறித்தும் பேச வாய்ப்பு இருப்பதாக வர வாய்ப்புள்ளது.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அமைந்துள்ளஉலகப்புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ துர்கா மல்லேஸ்வர சுவாமி (கனகதுர்கா) கோயிலில் தமிழக முதலமைச்சர் விஜய் நவராத்திரி வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வருகை தந்துள்ளார். தசரா திருவிழாவின் உட்சகட்ட கொண்டாட்டங்கள் மற்றும் முதலமைச்சரின் வருகையையொட்டி இந்திரகீலாத்திரி பகுதி முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. ஆந்திர அரசு சார்பில் அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் நேரில் வந்து முதலமைச்சர் விஜய்க்கு பாரம்பரிய முறைப்படி செண்டை மேளங்கள் முழங்க உற்சாக வரவேற்பளித்தனர்.

கனகதுர்கா கோயிலின் சிறப்புகள்

கிருஷ்ணா நதிக்கரையில் கம்பீரமாக அமைந்துள்ள இக்கோயிலில் வீற்றிருக்கும்தாய் கனகதுர்கா எட்டு கரங்களுடன் நான்கு அடி உயரத்தில் சுயம்புவாகத் தோன்றிய பெருமை கொண்டவர். வழக்கமான கோயில்களைப் போலன்றி, இங்கு பார்வதி தேவியான துர்கை, மல்லேஸ்வர சுவாமிக்கு வலதுபுறமாக அமைந்து பக்தர்களுக்குஅருள்பாலித்து வருகிறார். புராண நம்பிக்கைகளின்படி, கிருஷ்ணா நதியானது அம்மனுக்கு மூக்குத்தியை பரிசாக வழங்கியதாகப் போற்றப்படுகிறது.

மேலும், ஆதிசங்கரரால் இங்கு ஸ்ரீசக்கரம் நிறுவப்பட்டு உக்கிரமான தெய்வம் சாந்தப்படுத்தப்பட்ட வரலாறும் கொண்டது இத்தலம்.தீய சக்திகளை நீக்கி பக்தர்களின் பயத்தைப் போக்கி வெற்றியைத் தரும் இறைவியாக விளங்குவதால், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த அரசியல் தலைவர்களும் ஆன்மீகப் பெரியோர்களும் தங்களின் வெற்றிகளுக்காக இங்கு வந்து வழிபாடு செய்வது நீண்டகாலமாக மரபு வழியாகத் தொடர்கிறது. ஆன்மீகப் பயணத்தைத் தாண்டி, ஆந்திர அரசின் சார்பில் புன்னமி காட்டில் பிரம்மாண்டமாக நடைபெற்று வரும் கலாச்சாரப் பெருவிழாவான 'விஜயவாடா உத்சவ் 2.0' நிகழ்ச்சியிலும் முதலமைச்சர்விஜய்முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்கிறார். இந்நிகழ்ச்சியில் ஆந்திராவின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள், கண்கவர் லேசர் காட்சிகள் மற்றும் மாநிலத்தின் கலாச்சார பெருமையை பறைசாற்றும்பல்வேறுநிகழ்வுகள் அரங்கேறுகின்றன. இந்தத் திருப்பயணம் இரு மாநிலங்களுக்கு இடையிலான நல்லுறவையும் கலாச்சாரப் பரிமாற்றத்தையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு விஜய் மேற்கொள்ளும் இந்த முக்கியப் பயணம் அரசியல் வட்டாரங்களில் மிகுந்த கவனத்தை ஈர்த்துள்ளது. தசரா நவராத்திரி திருவிழாவின்போது தேசிய மற்றும் மாநிலத் தலைவர்கள் பலரும் விஜயவாடா கனகதுர்கா அம்மனைத் தரிசித்து வரும் சூழலில், தமிழக முதலமைச்சரின் இந்தப் பயணம் தமிழக மற்றும் ஆந்திர அரசியலில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஒரு யூனிட் மின்சாரம் ரூ.35க்கு வாங்கும் ஒப்பந்தம் ஏன்?

## அமைச்சர் நிர்மல் குமார் விவரிப்பு



சென்னை: "தமிழகத்தில் மின்பற்றாக்குறையை சமாளிக்க ஒரு யூனிட்ரூ.35என்றவிலையில் 4500 மெகாவாட் மின்சாரம் வாங்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் பல்வேறு அரசியல் கட்சிகளாலும் கடுமையாக விமர்சிக்கப்படும் நிலையில், அது குறித்து தமிழக மின் துறை அமைச்சர் நிர்மல் குமார் விவரித்துள்ளார்.

"இந்த ஒப்பந்தம் வரும் 15 முதல் 31-ம்தேதி வரை மட்டும் தான். இதனால் ஒரு நாளைக்கு நமக்கு கூடுதலாக ரூ.5 கோடி மட்டுமே செலவாகும்" என அமைச்சர் விளக்கியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்நிர்மல்குமார், "மின் கொள்முதலுக்காக ஓர் ஒப்பந்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம். உச்ச பயன்பாட்டு நேரமான மாலை 6 மணி முதல் 12 மணிவரை நமது தேவையை பூர்த்தி செய்வதற்காக இந்த ஒப்பந்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் தமிழகத்தின் மின் தேவை 16,800 மெகா வாட்டாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டில் இப்போது 21,700 மெகாவாட் அளவுக்கு,அதாவது 30 சதவீதம் நமது மின் தேவை அதிகரித்துள்ளது. எல்நினோ காரணமாக தமிழகத்தில் வெப்பம் குறையவில்லை, நாடு முழுவதும் இந்த நிலைதான் உள்ளது. இது யாரும் எதிர்பார்க்காத ஒன்று.

எல்லா மாநிலங்களும் மின்சாரத்தை ஒன்றிய தொகுப்பில் இருந்துதான் வாங்குகிறோம். எனவே தேசிய அளவில் உற்பத்தி என்ன, தேவை என்ன என்ற முன்னறிவிப்பை செய்ய வேண்டும் என கடந்த வாரம் ஒன்றிய அமைச்சருடனான ஆலோசனையின் போது தெரிவித்தேன். முன்பே இதுபோல எங்களிடம் மின்சாரம் இருக்காது என ஒன்றிய அரசு தெரிவித்திருந்தால், நாங்கள் வேறு வகையில் ஏற்பாடு செய்திருப்போம்.

ஒன்றிய தொகுப்பில் மின்சாரம் இல்லாததால், இதுபோல அதிக விலைக்கு வாங்கும் சூழல்ஏற்பட்டது.எனவே தான், கேஸ் மூலமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட்டுக்கு ரூ.35-க்கு வாங்க ஒப்பந்தம் செய்துள்ளோம். அவர்களின் உற்பத்தி செலவு அதிகம் என்பதால் அதிக விலைக்கு வாங்குகிறோம்.

என்எல்சியின் ஒன்றிய தொகுப்பில் இருந்து வரவேண்டியமின்சாரத்தில் 1850 மெகாவாட் கடந்த மாதத்தில் இருந்து தமிழகத்துக்கு வரவில்லை. அதுமட்டுமின்றி காற்றாலைகள் மூலம் 3500 மெகாவாட் மின்சா ரத்துக்கு திட்டமிட்டிருந்தோம், அதில் 500 மெகாவாட்தான் கிடைக்கிறது. இது இரண்டும் நமக்கு கிடைக்காததால், நாம் புதிதாக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். இதனை செய்யவில்லை என்றால் மற்ற மாநிலங்களைப் போல நாமும் மின்வெட்டு செய்ய வேண்டிய சூழல் ஏற்படும்.

யூனிட் ரூ.35க்கு வாங்கும் மின்சாரம் என்பது 24 மணி நேரத்துக்கும் கிடையாது. உச்ச பயன்பாட்டு நேரமான 6 மணி நேரத்துக்கு மட்டுமே. இந்த ஒப்பந்தம் வரும் 15 முதல் 31ம் தேதி வரை மட்டும் தான். நாம் 3500 மெகாவாட்டுக்கு அழைப்பு விடுத்துள்ளோம், ஆனால் 1500 மெகாவாட் மட்டும் தான் வாங்கப் போகிறோம். இதனால் ஒரு நாளைக்கு நமக்கு கூடுதலாக ரூ.5 கோடி மட்டுமே செலவாகும்.

அதுபோல தீபாவளி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு பண்டிகை கால தேவையை சமாளிக்க புதிய திட்டங்களை போட்டுள்ளோம். திமுக ஆட்சியில் இருந்த 5 ஆண்டுகளில் நீண்ட கால ஒப்பந்தங்கள் எதுவும் போடப்படவில்லை. அதனால் தான் நாம் குறுகிய கால ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாம் இந்த மாதத்தில் நீண்ட கால ஒப்பந்தம் மற்றும் 5 ஆண்டுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளோம். கடந்த திமுக ஆட்சியில் மின்சார துறைக்கு 4 அமைச்சர்கள் மாறி மாறி இருந்தனர்.அவர்கள் துறையாக முறையாக கவனிக்கவில்லை" என்றார்.

# ஆயுத பூஜைக்கு 6,199 சிறப்பு பஸ்கள் இயக்கப்படும்

## ஆம்னி பஸ் கட்டணத்தை கண்காணிக்க ஸ்பெஷல் குழு அமைக்கப்பட்டுள்ளது



ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி தொடர் விடுமுறையையொட்டி,சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்குச் செல்ல 6,199 சிறப்புப் பஸ்கள் உட்பட,3நாட்களில்மொத்தம் 15,659 பேருந்துகள் இயக்கப்படும் என தமிழக போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது. போக்குவரத்துத்துறைஅமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

19-ம் தேதி ஆயுதபூஜை,20-ம் தேதி விஜயதசமியையொட்டி வழக்கமாக இயக்கப்படும் பஸ்களோடு கூடுதலாக 6,190 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். கிளாம்பா க்கத்தில் இருந்து வழக்கம்போல் பஸ்கள் இயக்கப்படும். நாளை மறுநாள் (15-ம் தேதி) முதல் 18-ம் தேதி வரை சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். தீபாவளியை முன்னிட்டு நவம்பம் மாதம் 5-ந்தேதி முதல் 7-ந்தேதி வரை 9,086 சிறப்பு பஸ்கள் உள்ளிட்ட 15,659 பஸ்கள் இயக்கப்படும். பண்டிகை நாட்களில் சிறப்பு பஸ்கள் ரத்து செய்யப்படும் என வெளியாகும் தகவலில் உண்மையில்லை. ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வாங்கினால் அதை திரும்ப வசூலித்து ஒப்படைத்து வருகிறோம்.பண்டிகை நாட்களில் இயக்கப்படும் தனியார் பஸ்களுக்கான கட்டணம் விரைவில் அறிவிக்கப்படும். ஆம்னி பஸ் கட்டணத்தை கண்காணிக்க ஸ்பெஷல் குழு அமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் கட்டணம் வசூலித்தால் ஆம்னி பஸ்களை பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முன்பதிவு இல்லாத சிறப்பு ரெயில்கள் எண்ணிக்கையை அதிகரிக்குமாறுரெயில்வேதுறையிடம் கேட்டுள்ளோம்.

தசரா விடுமுறையையொட்டி 2 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிளாம்பாக்கம் காலநிலை பூங்காவில் தற்காலிகபேருந்து நிலையம் அமைக்கப்படும். காலநிலை பூங்காவில் இருந்து வந்தவாசி வேலூர் தி.மலை பேருந்துகள் இயக்கப்படும். கும்பகோணம் பேருந்துகள் மறைமலை நகரில் இருந்து தற்காலிகமாக இயக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# அச்சிறுப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய்மாமன் திட்டத்தின் கீழ் 50 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்

## மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்பசுகாதார மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறைசார்பில் தாய்மாமன்தங்கமோதிர திட்டத்தின் கீழ் மொத்தம் 205 ஆண் குழந்தைகள் 20 பெண் குழந்தைகள் 30 என 50 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் திட்டம்மதுராந்தகம்சட்டமன்றஉறுப்பினர்மரகதம் குமரவேல் தொடங்கி வைத்தார். அதில் முதல் கட்டமாக நேற்று 50 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை மதுரா ந்தகம் சட்டமன்ற உறுப்பினர்மரகதம்குமரவேல் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் சதீஷ்குமார் வட்டார மருத்துவ அலுவலர் சுரேஷ் உள்ளிட்டஅரசுசார்ந்தஅலுவலர்கள் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# ஆலங்குளம் அருகே நாம் தமிழர் கட்சி சார்பில் மரக்கன்றுகள் நடும்விழா

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே ஆலங்குளம் பேரவைத் தொகுதி நாதக சுற்றுச் சூழல் பாசறை சார்பில் 500 மரக்கன்றுகள் மற்றும் 1500 பனை விதைகள், நடப்பட்டன.

நிகழ்ச்சிக்கு வணிகள் பாசறை பொறுப்பாளர் ராமலிங்கம் தலைமை வகித்தார்.

மாவட்டபொறுப்பாளர் தினகரன், மாரிசேட் மருத்துவர் பால்ராஜ் திருமலை ராஜா ஆகியோர் முன்னிலையில் கட்சியை நிர்வாகிகள் சுகுமார் அரிபால் சுரேஷ் ஆனந்தகுமார் மயில்ராஜ் செல்வம் மார்ச்சனா ஜீவா பாரதி வின்சென்ட் டேவிட் ராஜா மகாராஜா ஆகியோர் கலந்து கொண்டு குருவன்கோட்டையில் உள்ளமானூர்கால்வாய் பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டு, பனை விதைகள் விதைக்கப்பட்டன.

நிகழ்வில் சுற்றுச் சூழல் பாசறை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு இப்பணியில் ஈடுபட்டனர்

# உடற்கல்விக்கு வாரத்தில் மூன்று கால வேலை என்று அறிவித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ஆ.ராஜ்மோகன் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு காலிய்யாக உள்ள பணியிடங்களையும் நிரப்ப தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கோரிக்கை



சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் தலைமையில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு பிறகு 2026 –2027 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வார காலவேலை அட்டவனையை வெளியிட்டார் 1ஆம் வகுப்புமுதல் 12ஆம் வகுப்புவரை காலை 9.30 மணி முதல் மாலை 4.10 மணி வரை வேலை நேரமாகவும் இருக்கும் என்றும் மாணவர்கள் கல்வியில் மட்டும் சிறந்தவர்களாக இருந்தால் போதாதது பிறதிறனிலும் சாதிக்க வேண்டும் என்பதற்காக உடற்கல்விக்கு ஏற்கனவே வாரத்தில் இரண்டு பாடவேலையாக இருந்ததை மூன்று பாடவேலையாக அறிவித்திருப்பது பள்ளி பருவத்திலேயே மாணவர்கள் தன் உடற்கட்டமைப்பிலும் விலையாட்டிலும் தன்னை மேம்டுத்தி மாவட்டம் மாநில, சர்வதேச அளவில் பல பதக்கங்களை பெற்று நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற உன்னத முயற்சியாக கருதுகிறோம் மேலும் கலை, இசை , இயற்கை நுண்ணறிவை உள்ளிட்ட பொது அறிவு சிந்தனையை மேம்படுத்தவும் விதமாக தனி பாடவேலையை உருவாக்கிஅறிவித்திருப்பதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வரவேற்க்கும் அதே நேரத்துல் பல பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் காலியாகவே உள்ளது ஆசிரியர் பணியிடத்தை உடனே நிரப்ப வேண்டும்அதேபோன்று ஓவிய ஆசிரியர் , இசை ஆசியர்கள் உள்ளிட்ட பிறஆசிரியர்பணியிடங்களும் காலியாக உள்ளது அதனை உடனே நிரப்பவேண்டும்மேலும் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பள்ளி வேலை நேரம் காலை 9.30 மணி முதல் 4.10 மணி வரை என்று அறிவித்திருப்பதையும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வரவேற்கிறோம்

சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு



தென்காசி மாவட்டம், குற்றாலம் காவல் நிலைய சரகத்தில், கொலை முயற்சி குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளைச்சம்பவ இடத்திலேயே உடனடியாகக்கைது செய்ய உதவி, அசம்பாவிதம் ஏற்படாமல் தடுத்து சிறப்பாகச் செயல்பட்ட இரண்டாம் நிலைக் காவலர் திரு. க. செந்தில்குமார் அவர்களை, (12.10.2026), திருநெல்வேலி சரக காவல்துறை துணைத்தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, இ.கா.ப., அவர்கள் சரக அலுவலகத்திற்கு நேரில் அழைத்துப் பாராட்டி, அவருக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

# நிலத்தை சரியான அளவில் அளந்து கொடுக்கும்படி மதுரை மாவட்ட ஆட்சியரிடம் புகார்



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் கருமாத்தூர் குறுவட்டம் புள்ளநேரி கிராமத்தில் புல எண் 53B/6DIB –ல் சின்னச்சாமி, குணசேகரன், ரகு (மைனர்), ஜெயபாலன், சனத் 1வயது, தெய்வம் சுவாதி (மைனர்) கீர்த்திகா11/2 வயது ஆகிய எட்டு பேருக்கு சொந்தமான 25 சென்ட் நிலத்தை மாயாண்டி அவரது மனைவி வீரமணி பெயரில் கிரயம் பெற்றுள்ளனர். அதை அளந்து கொடுத்த நில அளவையர் ஜெயபாண்டி என்பவர் பத்தடி பாதைக்கு மேற்க்காக 25 சென்ட் என்று அளந்து முறைப்படி கூறியுள்ளார் ஆனால் பத்திரத்தில் 25 சென்டிற்கு உட்பட்டு தான் பத்தடி பாதை வருவதாக சின்னசாமி குடும்பத்தார் பதிந்து கொடுத்து ஏமாற்றியுள்ளனர் இதற்கு முழு உடந்தையாக கையூட்டு பெற்றுக் கொண்டு நில அளவையர் ஜெயபாண்டி என்பவர் வரைபடம் உட்பட அனைத்தையும் டூப்ளிகேட் நகலாக மாற்றி பதிய உதவி புரிந்துள்ளார் இதனை புகாராக அளித்து மாவட்ட நிர்வாகம் மாநில நிர்வாகம் முதலமைச்சர் தனிப்பிரிவு தமிழ்நாடு நில அளவையர் தலைமை அலுவலர் வரை சென்று புகார் அளித்தும் யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வீரமணி மனவேதனையுடன் கூறியுள்ளார் தற்பொழுது மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மனு அளிக்க வந்தார் அப்போது அவர் கூறியதாவது எங்களுக்கு பாதையை எப்படியாவது மீட்டுக் கொடுங்கள் நியாயம் கிடைக்க வேண்டும் பொய்யான வரைபடத்தைரத்து செய்து அரசு நியாயமான வரைபடத்தை கொண்டு எங்களது பாதையை மீட்டு தர வேண்டும் என்று மிகவும் வேதனைடன் கூறியுள்ளார் சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் உடனடியாக மனுவை பரிசீளித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தனர்

# நடயனேரியில் சில்ட்ரன் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் ரத்தசோகை கண்டறிதல் மருத்துவ முகாம்



விருதுநகர் மாவட்டம், நடயனேரியில் சில்ட்ரன் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான ரத்தசோகை கண்டறிதல் மருத்துவ முகாம்நடைபெற்றது.

இந்த முகாமில் மாணவ, மாணவியர்களுக்குரத்தசோகையைத் தடுக்கும் வழிமுறைகள், சத்தான உணவுகளை உட்கொள்வதன் அவசியம், இரும்புச்சத்து மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளின் முக்கியத்துவம்,தனிநபர் சுகாதாரம் உள்ளிட்டவை குறித்து மருத்துவக் குழுவினர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையில், கூடுதல் மருத்துவக் கவனிப்பு மற்றும் தொடர் கண்காணிப்பு தேவைப்படும் மாணவர்களுக்கு உரிய மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மாணவர்களின் உடல் மற்றும் மனநலத்தைப் பாதுகாப்பதுடன், சிறுவயதிலேயே உடல்நலப் பிரச்சினைகளைக் கண்டறிந்து உரிய சிகிச்சை அளிப்பதில் இதுபோன்ற மருத்துவ முகாம்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்நிகழ்ச்சியில் ஆர் பி எஸ் கே மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் சில்ட்ரன் சாரிட்டபிள் டிரஸ்ட் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ம. சுதாகர் சாம் ஆகியோர் கலந்து கொண்டு, முகாமைச் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

# நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குப்பைகள் முறையாக அகற்றப்படுவதில்லை என பொதுமக்கள் தொடர்ந்து புகார்



நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் குப்பைகள் முறையாக அகற்றப்படுவதில்லை என பொதுமக்கள் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், கோட்டாறு கம்பளம் பாத்திரக்கடை சாலை மற்றும் வண்டிப்பேட்டை குடியிருப்புப் பகுதிகளில் அக்டோபர் 12 மற்றும் 13 ஆகிய இரண்டு நாட்களாகக் குப்பை சேகரிப்பு வாகனம் வரவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதனால் வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்த முடியாமல் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். மேலும், குப்பைகள் தேங்குவதால் துர்நாற்றம்வீசுவதுடன், சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயமும் உருவாகியுள்ளதாகத்தெரிவிக்கின்றனர். குறிப்பாக, டெங்கு காய்ச்சல் குறித்த அச்சம் நிலவி வரும் சூழலில், குடியிருப்புப் பகுதிகளில் குப்பைகள் முறையாக அகற்றப்படாதது பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட பகுதிகளில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றுவதுடன், தினசரி குப்பை சேகரிப்பு வாகனங்கள் தடையின்றி வருவதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், பொதுமக்களுக்கு நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்க உரிய சுகாதார மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி குடியிருப்புவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவையை சேர்ந்த இளைஞர் அக்ஷை சர்மா A Writer on a Mission (The Rise of Astraavan) என்ற ஆங்கில புத்தகத்தை எழுதி ஆஸ்கார் விருதுக்காக காத்திருப்பு



கோவை சாய்பாபா காலனி சேர்ந்த அக்ஷை ஷர்மா கடந்த2013-ம்ஆண்டு மின் பொறியியல் முடித்துவிட்டு மின் பொறியிகளாக ஜெர்மன்நாட்டைச்சேர்ந்த தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வந்தார்.அவரது தந்தை மனோஜ்சர்மாகடந்த 10 வருடங்களாக நோயிற்று ஏற்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

இந்த நிலையில் அக்ஷை சர்மாவிற்கு புத்தகம் எழுதுவது,இசையமைப்பாளர் ஆவது உள்ளிட்ட கனவுகள் ஏற்பட்ட நிலையில் கடந்த 2018-ம் ஆண்டு மின் பொறியாளராக வேலை பார்த்த நிறுவனத்தை விட்டு வெளியேறி புத்தகங்களை எழுத தொடங்கி உள்ளார்.

அதன் பிறகு 2018-ம் ஆண்டு "Flying Dreams" என்ற புத்தகத்தை எழுதி நிலையில் தேசிய அளவில் இடம் பெற்று பிரபல நடிகர்களான அமிதாப் பச்சன்,கேஜிஎப் படத்தின் நடிகர் யாஸ் உள்ளிட்ட பல்வேறு பிரபலங்கள் அவரை அழைத்து பாராட்டினர் தொடர்ந்து புத்தகங்கள் எழுதி வந்த நிலையில் அக்ஷை சர்மாவிற்கு 2023-ம் ஆண்டு நடிகர் சிம்பு நடித்த பத்து தலை படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

அதன் பிறகு "Bhai Sleepercell" என்ற படத்திலும் நடித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து A Writer on a Mission (The Rise of Astraavan) என்ற ஆங்கில புத்தகத்தை 2024-ம் ஆண்டு முதல் எழுதத் தொடங்கிய நிலையில் 2026-ம் ஆண்டு ஆங்கில புத்தகத்தை எழுதி நிறைவு செய்தார்.

அந்தப் புத்தகத்தில் வரும் கதைகளை 90 நிமிடம்வீடியோவாக பதிவு செய்து "ஆஸ்கார் விருது-க்கு" கடந்த செப்டம்பர் மாதம் இணையதளம் வாயிலாக பதிவு செய்திருந்தார்.இந்தக் கதையில் பெண்ணை உளவாளியாக மையமாக வைத்து ஏழு நாடுகளில் நடக்கும் ரகசியத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த கதை உருவாக்கப்பட்டு இருந்தது. மேலும் இந்த கதையில் முக்கியமாக "AIRCRAFT" ஊழல் குறித்து விரிவாக்கப்பட்டுள்ளது. இந்த கதையில் நீலகிரி மாவட்டம் குன்னூரில் தொடங்கி டெல்லி,லண்டன், ஜெர்மனி போன்ற நாடுகள் வழியாகசென்று இறுதியாக இலங்கையில் இந்த கதை நிறைவடையும் என்று அக்ஷை சர்மா தெரிவித்துள்ளார்.

பின்னர் கடந்து சில நாட்களுக்கு முன்பு அந்தக் கதையை A Writer on a Mission (The Rise of Astraavan) பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்வதாக அக்ஷை சர்மாவிற்கு இணையதளம் வாயிலாகதகவல்வந்துள்ளது.

ஆஸ்கார் விருதுக்காக காத்திருக்கும் அக்ஷை சர்மா இந்த கதை குறித்து விரைவில் பெரிய அளவில் படம் தயாரித்து வெளியிடப் போவதாகவும் இது பொது மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்று இருக்கிறது என கூறினார். இந்தியாவில் குறிப்பிட்ட பேர் ஆஸ்கார் விருது-திற்கு பதிவு செய்த நிலையில் தனது பதிவை ஆஸ்கர் விருது எடுத்துக் கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் விரைவில் தனக்கு ஆஸ்கர் விருது கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறார்.

## கோவை பீளமேடு பகுதியில் உள்ள ஐ.என்.எஸ்.டி. இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆப் டிசைன் கல்லூரியில் நடைபெற்ற அன்வல் ஸ்டுடன்ட் மீட் அப் 2026

### ஆடை வடிவமைப்பு துறை, வீடு அலுவலக உள் கட்டமைப்பு துறையில் பயிலும் மாணவ மாணவியர்களின் திறன் மேம்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது



டெல்லியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகின்ற, ஐஎன்எஸ்டி இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆப் டிசைன் என்ற நிறுவனம் இந்தியா முழுவதும் சுமார் 75 கிளைகளுடன், பல்வேறு ஆடை வடிவமைப்பு துறை மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகளை அளித்து வருகின்றது. இந்த நிறுவனம் கடந்த 2023ம் ஆண்டு, கோவை பீளமேடு பகுதியில், துவங்கபட்டு, 3 ஆண்டுகளாக செயல் பட்டு வருவதுடன் இதுவரையிலும் சுமார் 200க்கும் மேற்பட்ட ஆடை வடிவமைப்பு துறை, மாணவ மாணவியர்கள், வீடு மற்றும், அலுவலக உட்கட்டமைப்பு துறையில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு செயல்முறை பயிற்சிகளையும் பயிற்சி, வகுப்புகளையும் கற்று,தருவதுடன்,அவர்களின் திறன்களை அறிந்து சான்றிதழ்களும் வழங்கி உள்ளது. இந்த நிலையில் தற்போது சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் இங்கு ஆடை வடிவமைப்பு துறை,மற்றும் வீடு அலுவலக உள்கட்டமைப்பு துறையில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, கூடுதல் பயிற்சி வகுப்புகளாக,

பேஷன் டிசைன் பயிற்சிகள், ஜூவல்லரி மேக்கிங், அனிமேஷன் பயிற்சிகள், க்ராபிக்ஸ் டிசைன் பயிற்சிகள்,

இஞ்சினியரிங் டிசைன் பயிற்சிகள் என பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது. மேலும் ஆண்டுதோறும்,மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்த வருடாந்திர ஆண்டு விழா கொண்டாடபடுவதுடன், கடந்த ஆண்டுகளில் சிறந்த டிசைனர்களையும் வாழ்த்திபெருமைபடுத்தி வருகின்றனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய, ஐ.என்.எஸ்.டி.இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆப் டிசைன் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பிரனவ் ராஜ் அகர்வால், மற்றும் கோவை மையத்தின்

இயக்குநர் தேவேந்திரன், ஆகியோர் கூறியதாவது..

கடந்த மூன்று ஆண்டுகளாக கோவையில் ஐ.என்.எஸ்.டி இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆப் டிசைன் நிறுவனம் செயல்பட்டு வருகின்றதாகவும், இங்கு மாணவ மாணவியர்களுக்கு ஆடை வடிவமைப்பு துறை,வீடு மற்றும் அலுவலக உள்கட்டமைப்பு துறைகளில் உள்ள பல்வேறு சிக்கல்களை அகற்றுவது எவ்வாறு? எனசெயல்முறைவிளக்கங்களுடன் பயிற்சி அளிக்க பட்டு வருகின்றது.

தற்போது பயிற்சி மையத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் தொழில் திறன் பயிற்சி வகுப்புகளை பயின்று வருகின்றர். கூடுதலாக இங்கு டிப்ளமா, மாஸ்டர் டிப்ளமோ, பயிற்சிகளும், ஆட்டோ டெஸ்க் 3டி மேக்ஸ் என்ற,சான்றிதல் வகுப்புகளும் அளிக்க பட்டு வருகின்றதாக தெரிவித்தார்.

அன்வல் ஸ்டுடன்ட் மீட் அப் 2026 எனும் தலைப்பில் இன்று நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், மாணவர்களின் திறன்களை வேளிபடுத்தும்நோக்கமாகஅமைந்ததாக கூறினார். இங்கு ஆடை வடிவமைப்பு துறை மற்றும் வீடு அலுவலகவடிவமைப்புதுறை, மாணவ மாணவியர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள, முண்ணனி டிசைனிங் கல்லூரிகளில் வேலை வாய்ப்புகளும் கிடைக்க உதவும் என்றனர். மேலும் மாணவ மாணவியர்கள் இத்துறையில் பயிற்சி பெற்று சுய தொழில் துவங்குவது எப்படி? ஜிஎஸ்டி எடுப்பதுஎப்படி?நிறுவனத்தை பதிவு செய்பவது எப்படி, என்பது குறித்தும்விளக்கம் தருவதாக தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கன்னியாகுமரி மாவட்டம் திங்கள்சந்தை அருகே

## அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அறையில் மின்னல் தாக்கியதால் மின் சாதனங்கள், கோப்புகள் எரிந்து நாசமாகியது



குமரி மாவட்டம் திங்கள்சந்தை-யில் இருந்து அழகியமண்டபம் செல்லும் சாலை ஆலங்கோடு பகுதியில் அரசு நடுநிலைப் பள்ளி உள்ளது. இந்தப் பள்ளியில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அந்த பகுதியில் இடி மின்னலுடன் பலத்த கன மழை பெய்தது. அப்போது திடீரென ஏற்பட்ட மின்னல் பள்ளியின் கூரையை தாக்கியது. இதனால் ஏற்பட்ட அதிக மின்னழுத்தம் காரணமாக மின்சார ஒயர்கள், தலைமை ஆசிரியர் அறையில் இருந்த சிசிடிவிக்காக அமைக்கப்பட்ட டிவி, லேப் டாப், டேபிள் பேன் மேலும் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சில கோப்புகளும் மாணவர்களுக்கு கொடுக்க வைத்திருந்த புத்தகங்களும் எரிந்து நாசமாகின.

மின்னல் தாக்கி மின்சாதனங்கள் தீப்பிடித்து எரிந்ததால் அங்கு கரும் புகை எழுந்தது. சுவர், டேபிள், அடுக்கி வைத்திருந்த செயர் உள்ளிட்டவைகளும் தீயில் கருகி சாம்பலாகி கிடந்தது. நேற்று காலை ஊழியர்கள் தலைமை ஆசிரியர் அறை கதவை திறந்த போது தான் இந்த சம்பவம் தெரிய வந்தது. அப்போது அறைமுழுவதும் புகை மூட்டமாக இருந்தது. இது குறித்து தலைமை ஆசிரியர் உயர் அதிகாரிகளுக்கும், தக்கலை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்தார். அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடத்தை பார்வையிட்டனர்.

இந்த சம்பவம் இரவு நடந்ததால் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் யாரும் இல்லை. இதனால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. மின்னல் தாக்கி பள்ளி தலைமை ஆசிரியர் அறை தீயில் கருகிய சம்பவம் பெரு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



குமரி மாவட்டம் பத்மனாபபுரம் நகராட்சியில் கடந்த 13 நாட்களாக குடிநீர் விநியோகம் இல்லாததால் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். சீரான குடிநீர் வழங்கக்கோரி, நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து கவுன்சிலர்கள் காலி குடங்களுடன் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுரையின்படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக்கேட்டு, உடனுக்குடன் தீர்வுகாண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் ஒவ்வொருமாவட்டஆட்சியரும்,ஒவ்வொருமாதமும் மூன்றாவது புதன் கிழமை ஒரு நாள் வட்ட அளவில் தங்கி, களஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் சேவைகளும், தங்குதடையின்றி மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட அளவிலான இதர உயர் அலுவலர்கள் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தில் 21.10.2026 அன்று காலை 9.00 மணிமுதல் மறுநாள் (22.10.2026) காலை 9.00 மணி வரை தங்கி, பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் (சேவைகள்) ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து களஆய்வு மேற்கொள்வார்கள். பல்வேறு மாவட்ட நிலை அலுவலர்களும் இவ்வாய்வு பணியில் ஈடுபடுவார்கள்.

மேற்படி முகாம் நடைபெறுவதை முன்னிட்டு எதிர்வரும் 15.10.2026 அன்று சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும் முன்னோடிமனுக்கள்பெறும் முகாம் நடைபெற உள்ளது. எனவே, அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும் பெற்றிட ஏதுவாக இந்த முகாமினை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## செம்மண் முறைகேடு விவகாரம்: முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிரான அமலாக்கத் துறை வழக்கு ரத்து



சென்னை: செம்மண் முறைகேடு தொடர்பாக, முன்னாள் அமைச்சர் பொன்முடி உள்ளிட்டோருக்கு எதிரான அமலாக்கத் துறையின் சட்டவிரோதபணப்பரிமாற்றத் தடைசட்டவழக்கைரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006 - 2011ம் ஆண்டு வரையிலான திமுக ஆட்சியில் உயர்கல்வி மற்றும் கனிம வளங்கள், சுரங்கத்துறை அமைச்சராக க.பொன்முடி பதவி வகித்தபோது, விழுப்புரம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகளவில் செம்மண் வெட்டி எடுத்ததன் மூலம், அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்திருந்தது.

பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி, உறவினர் ராஜமகேந்திரன் உள்ளிட்டோர் மீதான இந்த வழக்கை விசாரித்த விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும்விடுதலைசெய்து, கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்தது.

முன்னதாக, செம்மண் முறைகேடு தொடர்பாக கிடைத்த பெருந்தொகை ஹவாலா பரிவர்த்தனை மூலம் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளதாகக் கூறி, அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோருக்கு எதிராக, சட்டவிரோத பணப்பரிமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையினர் வழக்குப்பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக, 2023-ம் ஆண்டு சென்னைசிபிஐநீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்களில், மூல வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டதால், சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கை தொடர்ந்து விசாரிக்க முடியாது என்பதால், அமலாக்கத் துறை வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மூல வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பொன்முடி உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால், அமலாக்கத் துறை வழக்கை தொடர அனுமதிக்க முடியாது எனக்கூறி, வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டது.

## "பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்" அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பு



சென்னை:

"பள்ளிகளில் இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும்" என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்தார். இதற்காக, தமிழக அரசின் மாநில பாடத் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கான திருத்திய கால அட்டவணையை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ராஜ்மோகன், "இனி வாரத்தில் 5 நாட்களும் உடற்கல்வி வகுப்புகளை நடத்தப்படும். அதற்கு வழிவகை செய்யும் திருத்திய கால அட்டவணை வெளியிடுகிறோம்.

இனி தினந்தோறும் மாணவர்களுக்கு உடற்கல்வி வகுப்புகள் நடத்தப்படும். உடற்கல்வி வகுப்புகளைக் காட்டாயமாக ஒதுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் அந்த வகுப்புகளை நிறுத்தக்கூடாது.

மாணவர்கள் உடற்பயிற்சிவகுப்புக்குச்செல்ல ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். அதற்கான மைதானங்கள், பயிற்சி, விளையாட்டு உபகரணங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடற்கல்வி ஆசிரியர்காலிப்பணியிடங்கள் உள்ளன. அதில் 2 ஆயிரம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளதாக நான் கண்டறிந்தேன்.

ஒரு உடற்கல்வி ஆசிரியர் காலிப்பணியிடம்கூட இருக்கக்கூடாது என நான் உத்தரவிட்டுள்ளேன். அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. திருத்திய கால அட்டவணை மூலம் மாணவர்களுக்கு தினமும் உடற்கல்வி வகுப்புகள் கிடைத்துள்ளது. சாதி,மதம்,நிறம்,விளையாட்டு திறன், உயரம், குள்ளம் என எதற்காகவும், எந்தக் குழந்தையையும்விளையாட்டில் இருந்து ஒதுக்கி வைக்காதீர்கள்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

## யுபிஐ பரிவர்த்தனைக்கான கட்டண வசூல் ஒத்திவைப்பு




ரூ.2,000க்கு மேற்பட்ட யுபிஐ பணப்பரிவர்த்தனைக்கு அறிவிக்கப்பட்ட கட்டண வசூல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழகம் உள்பட நாடு முழுவதும் உள்ள கடைகள், ஓட்டல் கள், வணிக நிறுவனங்கள் என அனைத்து பகுதிகளிலும் யு.பி.ஐ. மூலம் பணப்பரிவர்த்தனை செய்வது அதிகரித்து வருகிறது. இதனால் ரூபாய் நோட்டுகளின் புழக்கம் குறையத் தொடங்கியுள்ளது. இத்தகைய பணப்பரிவர்த்தனை மூலம் சில்லறை பிரச்சினைக்கு முற்றிலும் தீர்வு காணப்பட்டது. ரூபாயை கையில் எடுத்துசெல்லும்தேவை இல்லாத நிலைய ஏற்பட்டது. டீக்கடை முதல் நகைக்கடைவரையு.பி.ஐ. பணப்பரிவர்த்தனை உள்ளது.

இவ்வாறு ரூபாய் நோட்டுகளை மறக்கும் வகையில் யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனை தற்போது வியாபாரிகள், மக்களிடையே பிரபலமாகி உள்ளது.

இந்த நிலையில் ரூ.2 ஆயிரத்துக்கு மேல் குறிப்பிட்ட வியாபார யு.பி.ஐ. பணப்பரிவர்த்தனைகளுக்கு 0.4 சதவீத கட்டணம் விதிக்கப்படும் என்ற மத்திய அரசு அறிவித்து இருந்தது.

இந்த அறிவிப்பு வியாபாரிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது. இந்த புதிய நடைமுறை வருகிற 15-ந் தேதி முதல் அமலுக்கு வருவதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், ரூ.2,000க்கு மேற்பட்ட யுபிஐ பணப்பரிவர்த்தனைக்கு அறிவிக்கப்பட்ட கட்டண வசூல் ஒத்திவைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. தீபாவளிக்கு பிறகு யுபிஐ பரிவர்த்தனைக்காக கட்டண வசூல் அமல்படுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. ஏற்கெனவே அக்.15 முதல் திட்டம் நடைமுறைக்கு வரும் என அறிவிகப்பட்டிருந்தது.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், குழு தலைவர் / ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நேற்று (13.10.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , இணைத்தலைவர்/திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) செந்தில்குமரன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடுமாவட்டம்,பெருந்துறைவட்டம்,ஸ்ரீமஹாலில்நடைபெற்றஅரசுவிழாவில்மகளிர்சுயஉதவிக்குழுவினர்களுக்கு கடனுதவியினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் நேற்று (13.10.2026) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன் (மொடக்குறிச்சி) D.சண்முகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஸ்ரீமஹாலில் நடைபெற்ற அரசு விழாவில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாவினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் மற்றும் கைத்தறி துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி , ஆகியோர் நேற்று (13.10.2026) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன் (மொடக்குறிச்சி) D.சண்முகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# கூடலூரில் வீட்டின் முன்பு கிடந்த டயரை வைத்து விளையாடிய காட்டு யானை வீடியோ வைரல்



நீலகிரி மாவட்டம் கூடலூர் மாக்கமூலா பகுதியில்பலமாதங்களாக காட்டு யானைகள் ஊருக்குள் முகாமிட்டு வருகின்றன. இந்தநிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு காட்டு யானை ஒன்று திடீரென அப்பகுதிக்கு வந்தது. அங்குள்ள ஒரு மூதாட்டியின் வீட்டு முன்புநுழைந்தது.பின்னர் காட்டு யானை உணவு தேடி வீட்டின் முன்பு அங்கும், இங்குமாக சென்றது.

அப்போது வீட்டின் பக்கவாட்டு பகுதியில் பழைய டயர் ஒன்று யானையின் துதிக்கையில் பட்டது. பின்னர் அந்த டயரை உருட்டிவிட்டும், தூக்கி வீசியும், கால்பந்து விளையாடுவது போல் உதைத்தும் காட்டு யானை விளையாடியது. இந்த சமயத்தில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த மூதாட்டி, சத்தம் கேட்டு ஜன்னல் வழியாக வெளியே எட்டி பார்த்தார்.

அப்போது காட்டு யானை டயரை வைத்து விளையாடுவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். சிறிது நேரத்தில் காட்டு யானை அங்கிருந்துசென்றுவிடும் என மூதாட்டி பீதியில் வீட்டுக்குள் முடங்கி இருந்தார். ஆனால், காட்டு யானை 2 மணி நேரத்துக்கும் மேலாக டயரை வைத்து விளையாடியது.

பின்னர் அந்த மூதாட்டி இதுகுறித்து அப்பகுதி மக்களிடம் தெரிவித்தார். அவர்கள் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். இதனிடையே 2 மணி நேர விளையாட்டுக்கு பிறகு அந்த யானை தானாகவே அங்கிருந்து சென்றது. அதன் பின்னரே மூதாட்டியும், பொதுமக்களும் நிம்மதி அடைந்தனர். காட்டு யானை வீட்டின் முன்பு கிடந்த டயரை வைத்து விளையாடிய காட்சி கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது. இந்த வீடியோ சமூக வலைதளத்தில்வைரலாகி வருகிறது.

# ஈரோடு மார்க்கெட்டில் மஞ்சள் குவிண்டால் ரூ.21 ஆயிரத்தை நெருங்கியது



தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் தான் அதிகளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால், தடப்பள்ளி -அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

எல்நினோபருவநிலை மாற்றம் காரணமாக இந்த ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் மழை அளவு குறைந்து உள்ளது.

இதன் காரணமாக பவானிசாகர் அணையில் போதிய அளவில் தண்ணீர் இருப்பு இல்லாததால் இந்த ஆண்டு எந்த பாசனங்களுக்கும் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால்கடந்தஆண்டை விட இந்த ஆண்டு மஞ்சள் சாகுபடி பாதியாக குறைந்துவிட்டது.

விவசாயிகள் தங்களிடம் உள்ள பழைய மஞ்சளை தற்போது மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நடப்பு பருவத்தில் மஞ்சள் சாகுபடி, விவசாயிகளிடம் மஞ்சள் இருப்பு குறைந்துள்ளதாலும் தற்போது மஞ்சள் விலை உயர தொடங்கி உள்ளது. இந்த ஆண்டில் கடந்த ஜூலை மாதம் புது மஞ்சள் வரத்தானது அதிகபட்சமாக ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.19 ஆயிரத்து 779-க்கு ஏலம் போனது.

கடந்த மாதம் தொடக்கத்தில் ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனையான ஒரு குவிண்டால் மஞ்சள் அதைத்தொடர்ந்து படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. கடந்த 1-ந்தேதி ரூ.17 ஆயிரத்து 969-க்கு விற்பனையான ஒரு குவிண்டால் மஞ்சள் நேற்று ரூ.20 ஆயிரத்து 799-க்கு விற்பனை ஆனது. கடந்த 2 வாரத்தில் மட்டும் மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரத்து 800 வரை விலை உயர்ந்துள்ளது.

ஈரோடு கூட்டுறவு விற்பனை நிலையத்தில் நேற்று நடந்த ஏலத்தில், ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் குறைந்தபட்சமாக ரூ.19 ஆயிரத்து 419-க்கும், அதிகபட்சமாக ரூ.20 ஆயிரத்து 799-க்கும் விற்பனை ஆனது. இதேபோல் கிழங்கு மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக ரூ.17 ஆயிரத்து 849-க்கும், அதிகபட்சமாக ரூ.19 ஆயிரத்து 11-க்கும் ஏலம் போனது.

ஈரோடு மற்றும் பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், ஈரோடு கூட்டுறவு விற்பனை நிலையங்களில் நேற்று நடந்த ஏலத்துக்கு மொத்தம் 2 ஆயிரத்து 425 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில் வெறும் 1,435 மூட்டை மஞ்சள் மட்டுமே விற்பனை ஆனது. மேலும் கோபி கூட்டுறவு விற்பனை நிலையத்துக்கு நேற்று மஞ்சள் வரத்து இல்லை.

# ஈரோடு மாநகராட்சியில் 3 வகையான தற்காலிகப் பணியிடங்கள் காலி!

## எம்.எஸ்சி., டி.எம்.எல்.டி. மற்றும் 8ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு - மாதச் சம்பளம் ரூ.11,000 முதல் ரூ.44,000 வரை!

ஈரோடு: ஈரோடு மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் செயல்பட்டு வரும் நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகத்தில் (City Public Health Lab) நுண்ணுயிரியலாளர், ஆய்வக நுட்புநர் நிலை-III மற்றும் ஆய்வக உதவியாளர் ஆகிய மூன்று வகையான தற்காலிகப் பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணியிடங்களுக்கு உரிய கல்வித்தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலிப் பணியிடங்கள் மற்றும் கல்வித் தகுதிகள்:

1. நுண்ணுயிரியலாளர் (Microbiologist): நுண்ணுயிரியலில் முதுகலைப் பட்டம் (M.Sc. Microbiology) பெற்றிருக்க வேண்டும். மாதச் சம்பளம் ரூ.44,000.



2. ஆய்வக நுட்புநர் நிலை-III (Lab Technician Grade III): DMLT கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். மாதச் சம்பளம் ரூ.17,000.

3. ஆய்வக உதவியாளர் (Lab Assistant): 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மாதச் சம்பளம் ரூ.11,000.

விண்ணப்பிக்கும் முறை:

இப்பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள சம்பளத்தில் பணியமர்த்துபவர் மற்றும் பணியாளர் ஆகிய இருதரப்பினரின் EPF பங்களிப்புகளும் உள்ளடங்கும்.

விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் தங்களது கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பணி அனுபவ விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மேலாளர்,
நகர்ப்புற வாழ்வாதார மையம்,
பூமாலை வணிக வளாகம்,
பெருந்துறை ரோடு,
குமலன்குட்டை,
ஈரோடு – 638 011.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 26.10.2026, மாலை 4.00 மணிக்குள்.

விண்ணப்பதாரர்கள் நேர்காணல் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் என ஈரோடு மாநகராட்சி மாநகர நல அலுவலர் தெரிவித்துள்ளார்.

# ஈரோட்டில் அக்டோபர் 16ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் முகாம்

## ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் காலை 11 மணிக்கு நடைபெறுகிறது

ஈரோடு மாவட்டம், ஈரோடுவருவாய்கோட்டத்திற்கு உட்பட்ட ஈரோடு, பெருந்துறை, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் முகாம், வரும் 16.10.2026 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 11 மணிக்கு ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெறவுள்ள இம்முகாமில், விவசாயம் சார்ந்த கோரிக்கை மனுக்களுக்கு மட்டுமே தீர்வு காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட நான்கு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டு, தங்களது விவசாயம் தொடர்பான



கோரிக்கைகளை மனுக்களாக அளித்து பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# India's titfortat Ladakh naming drive irks China; Beijing calls it 'invalid'

China on Tuesday responded to India's recent move to unveil standard names for 28 locations in Ladakh, calling the action "illegal and invalid" and saying it has "never recognised" the Union Territory of Ladakh.

On October 2, India's home ministry announced names for 28 features and places in Ladakh as part of a new policy to respond to similar moves by China over the past few years to assert its claim on territories along the Line of Control (LAC) held by India. In August, the first such list of standard names for 27 locations in Arunachal Pradesh was issued.

"China has never recognised the so-called 'Union Territory of Ladakh' unilaterally and illegally established by India, and firmly opposes India's publication of so-called 'standard place names'," Chinese foreign ministry spokesperson Mao Ning told a regular media briefing in Beijing.

"India's move is illegal and invalid, and cannot change the objective fact that the western section of the China-India border has always belonged to China," she said in response to a question about the list of 28 standard names announced by the Indian side.



Indian officials did not immediately respond to Mao's remarks. The Indian government scrapped the special status of Jammu and Kashmir in August 2019 and split the state into the Union Territories of Jammu and Kashmir, and Ladakh.

The Union home ministry, while announcing the list of standard names for locations in Ladakh, said the government, in consultation with the Union Territory of Ladakh, had identified 28 places and features "by standard place and feature names on the official map of Survey of India".

"Identifying them formally on the Survey of India map of UT of Ladakh is aimed at facilitating their accurate recognition and better awareness among the public at large," the ministry said in a statement.

The 28 places nd features included 10 peaks, two passes, three mountains, seven "land areas", two glaciers, two water bodies, a valley and a river.

In recent years, China has repeatedly announced "standardised names" for dozens of places in Arunachal Pradesh as part of its claims on Indian territory. China refers to Arunachal Pradesh as "south Tibet" and there have been instances of Chinese authorities issuing stapled visas to residents of Arunachal Pradesh.

China has sought to rename dozens of locations in Arunachal Pradesh, including towns, rivers and geographic features, but India has argued that such actions will not change the reality. China resorted to such renaming exercises in 2017, 2021, 2023 and 2024, usually during periods of strained bilateral relations.

India and China are currently normalising their ties, which fell to an all-time low after a military standoff on the LAC began in 2020 and lasted more than four years. As part of this process of normalisation, the two countries have held talks to resolve their long-standing border dispute.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.